# 66/2019–T

Question Booklet Alpha Code **A** Question Booklet Serial Number

| Total Number of questions : 100 | Maximum Marks : 100 | Time : 75 Minutes |
|---|---|---|

**A**

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz.A,B,C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is unnumbered, please get it replaced by new question booklet with same alpha code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet, until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so, he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

DO NOT WRITE HERE

001. மதிப்பிடுக $\frac{(+15)-(-25)+12}{-4}$ = ________.

(A) -13
(B) 4
(C) 13
(D) 8

002. $\frac{7}{4} - \frac{5}{4}$ என்பதின் தசம வடிவ விடை எண் ________.

(A) 0.25
(B) 0.3
(C) 0.5
(D) 0.75

003. ஒரு எண்ணின் 8% மதிப்பு 250 என்றால் அந்த எண் ________

(A) 3112
(B) 3415
(C) 3125
(D) 3472

004. ஒரு பொருளின் அடக்க விலை ரூ.3250. அது 2.5% நஷ்டத்தில் விற்கப்பட்டால் அதன் விற்பனை விலை :

(A) ரூ. 3168.75
(B) ரூ. 3175.25
(C) ரூ.3155.50
(D) ரூ.3183.25

005. ஒரு வங்கியின் வருடாந்திர வட்டிவிகிதம் 12% எனில் 36500 ரூபாய்க்கான மூன்று மாதத்திற்கான காலாண்டு வட்டி எவ்வளவு?

(A) ரூ.1060.50
(B) ரூ.1095.00
(C) ரூ.1095.50
(D) ரூ.1100.00

006. இட்லி தயாரிக்க ஒரு கிலோ அரிசிக்கு 400 கிராம் உளுந்து தேவை எனில் அவற்றின் விகிதாச்சாரம் என்ன?

(A) 2:5
(B) 3:5
(C) 1:4
(D) 5:2

007. 25 நிமிடங்களில் 5 கிமீ தூரத்தை ஒரு சைக்கிள் கடந்தால் மூன்றரை கிலோமீட்டர் தூரத்தை கடக்க தேவைப்படும் நேரம்

(A) 12.5 நிமிடங்கள்
(B) 15.5 நிமிடங்கள்
(C) 17.5 நிமிடங்கள்
(D) 18.5 நிமிடங்கள்

008. $2^{2^{2^2}}$ - ன் மதிப்பு

(A) 8 (B) 16

(C) 64 (D) 256

009. 1, 6, 11 என்ற வரிசையில் அடுத்தடுத்து வரும் இரு எண்களுக்கிடையிலான வித்தியாசம்

(A) 4ன் மடங்கு. (B) 5ன் மடங்கு.

(C) 6ன் மடங்கு. (D) மேற்கூறியவை எதுவுமில்லை.

010. 6 செமீ பக்க அளவைக் கொண்ட சமபக்க முக்கோணத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட அறுகோணத்தின் சுற்றளவு .

(A) 12 செமீ. (B) 24 செமீ.

(C) 30 செமீ. (D) 36 செமீ.

011. 1, $\frac{1}{2}, \frac{1}{2^2}, \frac{1}{2^3}$ ....... என்பதன் இயற்கணித வடிவம் (அல்ஜீப்ரிக் ஃபார்ம்).

(A) $\frac{1}{2^{-n}}$ (B) $\frac{1}{2^n}$

(C) $\frac{1}{2^{n-1}}$ (D) $\frac{1}{2^{n+1}}$

012. x = 2, y = 1, எனில் $\frac{x^2 - y^2}{x + y}$ ன் மதிப்பு ________

(A) – 1 (B) 1

(C) – 2 (D) 2

013. RAN = QBM மற்றும் SIM = RJL எனில் XYZன் மதிப்பு

(A) WXZ (B) YZX

(C) WXY (D) WZY

014. பின்வரும் எண்களில் எது வித்தியாசமானது: 27, 33, 37, 39?

(A) 27 (B) 33

(C) 37 (D) 39

015. ஒரு நபர் ஒரு இடத்திலிருந்து வடக்கு பக்கமாக 20 மீட்டர் தொலைவு கடந்தபின், இடது புறம் திரும்பி 30 மீட்டர் நடந்து பின் மீண்டும் இடதுபுறம் திரும்பி 35 மீட்டர் நடந்து பின் வலதுபுறம் திரும்பி 15 மீட்டர் தொலைவு நடந்து பின் வலதுபுறம் திரும்பி 15 மீட்டர் நடந்தார் எனில் ஆரம்ப இடத்திலிருந்து அவர் கடந்து வந்த மொத்த தொலைவு மற்றும் திசை என்ன?

(A) 15 மீ மேற்கு (B) 30 மீ மேற்கு

(C) 45மீ மேற்கு (D) 45மீ கிழக்கு

016. ← குறியீடு கழித்தலையும், → குறியீடு கூட்டலையும், ↑ குறியீடு பெருக்கலையும் ↓ குறியீடு வகுத்தலையும் குறிக்கும் எனில், (64 ← 36) ↓ (8 → 6) ↑ 5 = ___________

(A) 10 (B) 8

(C) 6 (D) 5

017. கடிகாரத்திற்கு எதிரில் உள்ள கண்ணாடியில் தெரியும் நேரம் 5 மணி 17 நிமிடங்கள் எனில் சரியான நேரம் என்ன :

(A) 6 மணி 17 நிமிடங்கள் (B) 6 மணி 43 நிமிடங்கள்

(C) 5 மணி 43 நிமிடங்கள் (D) 5 மணி 17 நிமிடங்கள்

018. ஒரு கடிகாரத்தில் 4 மணி 15 நிமிடம் எனில் மணி முள் மற்றும் நிமிட முள்ளிற்கு இடைப்பட்ட கோணம் :

(A) $37\frac{1}{2}^{o}$ (B) $45^{\circ}$

(C) $30\frac{1}{2}^{o}$ (D) $45\frac{1}{2}^{o}$

019. 101 x 99 - 105 x 95 = ___________

(A) 4 (B) 14

(C) 24 (D) 27

020. 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம்தேதி ஞாயிற்றுக்கிழமை எனில், 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் தேதி என்ன கிழமையாக இருக்கும்?

(A) ஞாயிற்றுக்கிழமை (B) திங்கட்கிழமை

(C) செவ்வாய்கிழமை (D) சனிக்கிழமை

021. உலகிலேயே மிகவும் எடை குறைவான செயற்கைக்கோள் எது ?

(A) மைக்ரோசாட்R (B) ஓஷன் சாட்

(C) கலாம் சாட்V2 (D) எமிசாட்

022. இந்திய உச்ச நீதிமன்றத்தின் 46-வது தலைமை நீதிபதி யார் ?

(A) நீதிபதி ரஞ்சன் கோகாய்
(B) நீதிபதி ஹ்ரிஷிகேஷ் ராய்
(C) நீதிபதி தீபக் மிஸ்ரா
(D) நீதிபதி T.S. தாக்கூர்

023. ''கேலோ இண்டியா யூத் கேம்ஸ் 2019''ன் வெற்றியாளர் யார்?

(A) ஹரியானா
(B) மகாராஷ்டிரா
(C) கேரளா
(D) கர்நாடகா

024. 'கிஷன் கங்கா' நீர் மின்நிலையம் அமைந்துள்ள மாநிலம் எது?

(A) இமாச்சலப் பிரதேசம்
(B) உத்தரப்பிரதேசம்
(C) ஜம்மு காஷ்மீர்
(D) உத்தராஞ்சல்

025. 2018-ஆம் ஆண்டு கேரளாவில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது சேவை வழங்கிய இந்திய விமானப்படை நிவாரண முகாமின் பெயர்:

(A) ஆபரேஷன் சஹயோக்
(B) ஆபரேஷன் மமாத்
(C) ஆபரேஷன் கருணா
(D) ஆபரேஷன் ஜலரக்ஷா

026. பறவைகளின் கூடு பற்றிய படிப்பிற்கான பெயர் :

(A) மேக்காலஜி
(B) ஃபிகாலஜி
(C) ஆர்னித்தாலஜி
(D) கேலியோலஜி

027. மைக்ரோசாஃப்ட் விண்டோஸ் ஆபரேடிங் சிஸ்டம் அறிமுகப்படுத்தப்பட்ட வருடம் எது?

(A) 1975
(B) 1985
(C) 1965
(D) 1980

028. அர்ஜுனா விருதை வென்ற முதல் இந்திய கால்பந்து விளையாட்டு வீரர் யார் ?

(A) P.K. பானர்ஜி
(B) I.M. விஜயன்
(C) பைச்சங் பூட்டியா
(D) சுனில் சேத்ரி

029. ஹசாரிபாக் தேசிய பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது ?

(A) சத்தீஸ்கர்
(B) ஜார்க்கண்ட்
(C) உத்ராஞ்சல்
(D) மத்தியப் பிரதேசம்

030. ஆப்பிரிக்காவையும் ஆசியாவையும் பிரிக்கும் கடல் :

(A) செங்கடல் (B) கருங்கடல்

(C) மத்திய தரைக்கடல் (D) அரபிக்கடல்

031. ஒரு கம்ப்யூட்டரின் (கணினியின்) மானிட்டர் (திரை) உள்ளீடு சாதனமா அல்லது வெளியீடு சாதனமா?

(A) உள்ளீடு சாதனம் (B) வெளியீடு சாதனம்

(C) மேற்கூறியது எதுவுமில்லை (D) உள்ளீடு மற்றும் வெளியீடு சாதனம்

032. லத்தீன் அமெரிக்க கலாச்சார மையங்களில் ஒன்றான மச்சுப்பிச்சு அமைந்துள்ள நாடு எது?

(A) அர்ஜென்டினா (B) பெரு

(C) பொலிவியா (D) சிலி

033. ஃப்ரெஞ்சுப் புரட்சியின் நினைவாக 'ட்ரீ ஆஃப் லிபர்ட்டி' எனப்படும் விடுதலை மரத்தை தலைநகரத்தில் நட்டு 'ஜாக்கோபின்' ஃப்ரெஞ்ச் க்ளப்பின் உறுப்பினரான இந்திய ஆட்சியாளர் யார்?

(A) ஹைதர்அலி (B) மார்த்தாண்ட வர்மா

(C) பழசி ராஜா (D) திப்பு சுல்தான்

034. 'பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி இல்லை' என்ற வாசகம் எந்த விடுதலைப் போராட்டத்தில் தொடர்புடையது?

(A) இந்திய சுதந்திரப் போராட்டம்

(B) அமெரிக்க சுதந்திரப் போராட்டம்

(C) லத்தீன் அமெரிக்க சுதந்திரப் போராட்டம்

(D) ஃப்ரெஞ்சுப் புரட்சி

035. கீழ்க்கண்டவற்றில் வித்தியாசமானது எது ?

(A) மாயன் (B) இன்கா

(C) மொகல்லன் (D) அஸ்டெக்

036. கிழக்கு ரோமானிய பேரரசின் பிரசித்தி பெற்ற அரசர்:

(A) டயோக்ளிஷன் (B) ஷாலமீன்

(C) ஜஸ்டினியன் (D) கான்ஸ்டன்டைன்

037. தேம்ஸ் நதிக்கரையில் அமைந்துள்ள பிரபல நகரம் :

(A) லண்டன் (B) பாரீஸ்

(C) ரோம் (D) மாஸ்கோ

038. ஆன்ட்ராய்டு ஆபரேட்டிங் சிஸ்டத்தை அறிமுகம் செய்த நிறுவனம் :

(A) கூகிள் (B) மைக்ரோசாஃப்ட்

(C) ப்ளாக்பெர்ரி (D) லினக்ஸ்

039. பொது நியமனங்களில் சமத்துவத்தை எதிர்பார்க்கும் அடிப்படை உரிமைகளுக்கான கருத்தியல் எது தொடர்பானது?

(A) விடுதலைக்கான உரிமை

(B) சுரண்டலுக்கு எதிரான உரிமை

(C) கல்வி மற்றும் கலாச்சாரத்திற்கான உரிமை

(D) சமத்துவத்திற்கான உரிமை

040. அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்துவதற்காக எத்தனை வகையான மனுக்களை (நீதிப்பேராணை/சாசனம்) உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதி மன்றம் பிறப்பிக்கலாம்?

(A) 3 வகைகள் (B) 4 வகைகள்

(C) 5 வகைகள் (D) 6 வகைகள்

041. ஆப்பிளில் உள்ள அமிலம் எது ?

(A) அஸ்கார்பிக் அமிலம் (B) மேலிக் அமிலம்

(C) காப்ரிக் அமிலம் (D) ஆக்ஸாலிக் அமிலம்

042. 'ஆதார் கிராமம்' என அழைக்கப்படும் முதல் இந்திய கிராமம் எது?

(A) பந்தலபள்ளி (B) செரியநாடு

(C) செருகுளத்தூர் (D) தேம்ப்ளி

043. 'ஆகஸ்ட் க்ராந்தி பவன்' என்ற தலைமையகம் எந்த அலுவலகத்துடன் தொடர்புடையது?

(A) தேர்தல் ஆணையம்

(B) யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்

(C) மத்திய கண்காணிப்பு ஆணையம்

(D) மத்திய தகவல் அறியும் உரிமை ஆணையம்

044. ஆல்ப்ஸ் மலைத்தொடர் வழியாக தெற்கு சமவெளியை நோக்கி வீசும் காற்றின் பெயர்:

(A) ஃபான் (B) சினூக்

(C) ஹார்மல்ட்டன் (D) லூ

045. புவியியல் வரைபடங்களின் உயரத்தைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்படும் எல்லைக் கோடுகளின் வண்ணம்

(A) கருப்பு (B) சிவப்பு

(C) பழுப்பு (D) பச்சை

046. ஆக்ஸிஜன் நிறமற்றது. ஆனால் திரவ ஆக்ஸிஜனின் நிறம் என்ன?
(A) சிகப்பு
(B) மஞ்சள்
(C) நிறமற்றது
(D) நீலம்

047. கேரளாவுடன் தொடர்புடைய சங்க கால காவியம் எது?
(A) பதிற்றுப்பத்து
(B) அகநானூறு
(C) புறநானூறு
(D) தொல்காப்பியம்

048. உலகின் முதல் இஸ்லாமிய பெண் பிரதம மந்திரி யார்?
(A) பேகம் கலீதாசியா
(B) பெனாசிர் புட்டோ
(C) தன்சு சில்லார்
(D) ஷேக் ஹசீனா

049. 'கிரேட் பாரியர் ரீஃப்' எனப்படும் உலகின் மிகப்பெரிய பவளப்பாறைத் தொடர் எங்கு உள்ளது ?
(A) ஆஸ்திரேலியா
(B) U.S.A.
(C) கனடா
(D) தென்னாப்பிரிக்கா

050. பின்வருபவர்களில் யார் பிறந்த 'வழுவேலி தரவாடு' என்ற வீட்டை கேரள அரசாங்கம் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக அறிவித்தது ?
(A) O.N.V.
(B) கமல சூரைய்யா
(C) சுகந்தகுமாரி
(D) M. முகுந்தன்

051. உலக சுற்றுச்சூழல் தினமாக கொண்டாடப்படும் நாள் :
(A) செப்டம்பர் 16
(B) ஏப்ரல் 22
(C) மார்ச் 22
(D) ஜூன் 5

052. 2018-ஆம் ஆண்டு 'எழுத்தச்சன் விருது' பெற தகுதி பெற்றவர் யார் ?
(A) C. ராதாகிருஷ்ணன்
(B) K. சச்சிதானந்தன்
(C) M. முகுந்தன்
(D) N.S. மாதவன்

053. 'ஓர்மகளுடே பிரமாண பாதங்கள்' என்ற சுயசரிதை யாருடையது?
(A) நம்பி நாராயணன்
(B) K. ராதாகிருஷ்ணன்
(C) G. மாதவன் நாயர்
(D) A.S. கிரண் குமார்

054. உலகிலேயே மிக நீண்ட சைக்கிள் பாதையை உருவாக்கிய நாடு எது ?
(A) U.S.A.
(B) ஜப்பான்
(C) இந்தியா
(D) சீனா

055. இந்தியாவின் மிக உயர்ந்த மலைச்சிகரமான மவுண்ட் K2 (காட்வின் ஆஸ்டின்) எந்த மலைத் தொடரில் அமைந்துள்ளது?

(A) லடாக்
(B) சஸ்கார்
(C) காரகோரம்
(D) ஹிமாத்ரி

056. இந்தியாவின் மிக நீளமான நதியான கங்கை உற்பத்தியாகும் இடம்:

(A) மானசரோவர் ஏரி
(B) கோமுக் குகை
(C) செமா யங்டிங் ஹிமானி
(D) மைசாலா மலைத்தொடர்கள்

057. தேசிய நுகர்வோர் தினம் எது?

(A) டிசம்பர் 24
(B) ஜனவரி 24
(C) டிசம்பர் 21
(D) மார்ச் 15

058. சுதந்திரத்திற்காக இந்திய குடியரசுப்படை என்னும் புரட்சிப்படையை உருவாக்கிய தலைவர் யார் ?

(A) வீர் சவார்க்கர்
(B) லாலா ஹர்தயாள்
(C) சூர்யா சென்
(D) சுபாஷ் சந்திர போஸ்

059. பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் மற்றும் இந்திய பிரபுத்துவத்துக்கு எதிராக 'தோபாகா ஸ்டிரைக்' எனப்படும் போராட்டம் நடைபெற்ற இடம் :

(A) தெலங்கானா
(B) வங்காளம்
(C) மீரட்
(D) லாகூர்

060. 'மய்யாழி காந்தி' என்று அறியப்படுபவர் யார்?

(A) K. கேளப்பன்
(B) V.P. மேனன்
(C) I.K. குமரன்
(D) U.K. குமரன்

061. பின்வரும் பெயர்கள் மாநில மறுசீரமைப்பு ஆணையத்துடன் தொடர்புடையன. எந்த ஒன்று அதனுடன் தொடர்பில்லாதது?

(A) ஃபசல் அலி
(B) K.M. பணிக்கர்
(C) H.N. குன்ஸ்ரூ
(D) பொட்டி ஸ்ரீராமுலு

062. சமுதாயத்தில் நிலவி வந்த சமத்துவமின்மை மற்றும் காட்டுமிராண்டித்தனத்தை ஒழிக்க அய்யன்காளியால் உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

(A) சாதுஜன பரிபாலன சங்கம்
(B) சமத்துவ சமாஜம்
(C) ஆத்ம வித்யா சங்கம்
(D) ஆர்ய சமாஜம்

063. எந்த வருடம் ஆலயப்பிரவேச பிரகடனம் நிகழ்த்தப்பட்டது ?

(A) 1936 நவம்பர் 22
(B) 1936 நவம்பர் 12
(C) 1931 நவம்பர் 12
(D) 1931 நவம்பர் 22

064. ‘‘ஒன்னேகால் கோடி மலையாளிகள்’’- இந்த புத்தகத்தின் ஆசிரியர் யார்?

(A) N.V. கிருஷ்ணவாரியர்
(B) பட்டம் தாணுப்பிள்ளை
(C) V.P. மேனன்
(D) E.M.S. நம்பூத்ரிபாட்

065. அரசியல் அறிவியலின் தந்தை யார்?

(A) பிளாட்டோ
(B) சாக்ரடீஸ்
(C) அரிஸ்டாட்டில்
(D) ஜெரமி பண்டம்

066. மனித தோற்றம் மற்றும் பரிமாணக் கோட்பாடு குறித்த படிப்பிற்கான பெயர் :

(A) உளவியல்
(B) மனிதம் தொடர்பான அறிவியல்
(C) வரலாறு
(D) அரசியல் அறிவியல்

067. மனித உடலில் கால்சியம் சத்தை உட்கிரகிக்கும் திறனை மேம்படுத்தும் விட்டமின் எது?

(A) விட்டமின் A
(B) விட்டமின் C
(C) விட்டமின் D
(D) விட்டமின் E

068. பின்வருவனவற்றில் எது அண்டார்ட்டிகாவில் உள்ள இந்தியாவின் மூன்றாவது ஆய்வுமையம்?

(A) ஷோங்ஷான்
(B) தெற்கு கங்கோத்ரி
(C) மைத்ரி
(D) பாரதி

069. வளிமண்டலத்தில் எந்த அடுக்கில் ஓசோன் படலம் அமைந்துள்ளது ?

(A) ட்ரோபோஸ்பியர்
(B) ஸ்ட்ராடோஸ்பியர்
(C) மெசோஸ்பியர்
(D) தெர்மோஸ்பியர்

070. எந்த வெப்பநிலையில் நீரின் அடர்த்தி அதிகமாக இருக்கும்?

(A) 100°C
(B) 94°C
(C) 4°C
(D) 10°C

071. Either my father or my mother __________ coming to meeting.

(A) is (B) are

(C) have (D) None of the above

072. It was the __________ dress I had ever bought.

(A) Most cheapest (B) Cheaper

(C) Cheapest (D) Cheap

073. If that is the case, __________ I am not surprised about what is happening.

(A) than (B) then

(C) when (D) or

074. Have you had a discussion about __________ to go to the movies or not?

(A) neither (B) whether

(C) either (D) better

075. Ramu usually __________ football in the evening.

(A) Play (B) playing

(C) have played (D) plays

076. I am too tired, __________ ?

(A) aren't I (B) don't I

(C) amn't I (D) won't I

077. He killed two parrots __________ one stick.

(A) with (B) by

(C) at (D) in

078. If you had read the paper, you __________ seen the advertisement.

(A) will (B) had

(C) would have (D) will have

079. As we drove down the countryside, we saw a __________ of sheep gazing in the fields.

(A) herd (B) pack

(C) troop (D) flock

080. The correctly spelt word below is

(A) acesary  (B) accesary

(C) accessary  (D) accessarry

081. The antonym of startled is

(A) amused  (B) relaxed

(C) endless  (D) astonished

082. The synonym of august is

(A) common  (B) ridiculous

(C) pretty  (D) dignified

083. My friend has given me a lot of ___________ over the years. I think he wants me to use it to write to him.

(A) stasionary  (B) stationery

(C) stationary  (D) stashionary

084. He ___________ his property to the trust.

(A) gave away  (B) gave in

(C) gave up  (D) gave off

085. A person who does not believe in the existence of God.

(A) Theist  (B) Heretic

(C) Atheist  (D) Fanatic

086. He made a few introductory remarks ___________ the concert began.

(A) While  (B) After

(C) When  (D) Before

087. She visits her father <u>*once in a bluemoon.*</u>

(A) Seldom  (B) Once in a month

(C) Every day  (D) None of the above

088. I have been working here ___________ 2002.

(A) from  (B) since

(C) till  (D) for

Choose the Correct option for the underlined phrase.

089. The man to who I sold my house was a cheat.

(A) to whom I sell
(B) to who was sold
(C) to who I sell
(D) to whom I sold

090. Raju wore a white shirt.

Choose the one which best expresses the given sentence in passive voice.

(A) A white shirt is worn by Raju.
(B) A white shirt is being worn by Raju.
(C) A white shirt was worn by Raju.
(D) A white shirt is wearing by Raju.

091. வினைச்சொல் என்பது :

(A) பெயரைக் குறிப்பது
(B) வினையைக் குறிப்பது
(C) பெயரடையைக் குறிப்பது
(D) வினையெச்சத்தைக் குறிப்பது

092. அ, இ, உ என்பன :

(A) சுட்டுப் பெயர்கள்
(B) மூவிடப் பெயர்கள்
(C) வினைமுற்றுக்கள்
(D) பெயரெச்சங்கள்

093. பின்வருவனவற்றில் சரியான தொடரைக் குறிப்பிடுக :

(A) இராமன் காட்டுக்குச் சென்றான்
(B) இராமனால் காட்டுக்குச் சென்றான்
(C) இராவணன் காட்டுக்குச் சென்றான்
(D) இராமன் இலங்கைக்குச் சென்றான்

094. மா என்ற சொல்லின் பொருளைத் தருக :

(A) சிறியது
(B) பெரியது
(C) ஊர்வன
(D) பறவை

095. பகுபதத்தில் பகுதி, விகுதி, இடைநிலை முதலிய உறுப்புக்களைச் சார்ந்து வருவது :

(A) சந்தி (B) சாரியை

(C) விகாரம் (D) எழுவாய்

096. அக்னி சாட்சி என்ற மலையாள நாவலின் ஆசிரியர் யார்?

(A) சாரா ஜோசப் (B) வாசுதேவன் நாயர்

(C) முகுந்தன் (D) லலிதாம்பிகா அந்தர்ஜனம்

097. உள்ளூர் என்ற சிறப்புப் பெயரால் அறியப்படும் இலக்கியக் கர்த்தாவின் பெயரைக் குறிப்பிடுக :

(A) பரமேஸ்வரன் நாயர் (B) ரமேஷன் நாயர்

(C) பெரும்படவம் ஸ்ரீதரன் (D) தகழி சிவசங்கரன்

098. குடும்ப விளக்கு என்ற நூலின் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக :

(A) பாரதியார் (B) பாரதிதாசன்

(C) கவிமணி (D) கண்ணதாசன்

099. **Look before you leap** என்பதன் தமிழாக்கத்தை எழுதுக :

(A) ஆழம் தெரியாமல் காலை விடாதே

(B) வையத் தலைமை கொள்

(C) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

(D) புத்திமான் பலவான்

100. **Knowledge is power** என்பதன் தமிழாக்கத்தை எழுதுக :

(A) கடமையே அனைத்தும் (B) புத்தியே சகல சக்தியும்

(C) நேர்மையே எல்லாமும் (D) அறிவு சக்தி வாய்ந்தது

**SPACE FOR ROUGH WORK**